# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## ஜனவரி–பிப்ரவரி 2026
## சிகரம் (CM00)

## நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)

**நேரம்: 3.00 மணி நேரம்** **மதிப்பெண்: 75**

**பகுதி – அ**
**படித்தல் திறன்**

**I. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியினைப் படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**
**Read the passage and answer the questions that follow : (5x 1= 5)**

தமிழ்ப் பேராசிரியர், தமிழ் மானுடவியலாளர், தொல்பொருள் ஆய்வாளர், எழுத்தாளர், பேச்சாளர் எனப் பன்முகம் கொண்டவர் தொ.ப என்று அழைக்கப்படும் தொ. பரமசிவன். பண்பாட்டு ஆய்வுகளில் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடித்தவர் தொ.ப. நாட்டார் வழக்குகளையும் சடங்குகளையும் உயிர்ப்போடு பதிவுசெய்தவர். சிறு சடங்குகள் முதல் நீத்தார் சடங்குகள் வரை அனைத்தையும் காரண காரிய விளக்கங்களுடன் தம்முடைய படைப்புகளில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் பண்பாடு குறித்துத் தொ.பரமசிவன் அவர்களின் தற்காலத் தமிழ் உரையாடல்களில் முதன்மையான இடம் உண்டு. தமிழர் பண்பாடு குறித்த பல நுட்பமான செய்திகளைத் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். எளிய மக்களிடம் சிதறிக்கிடக்கும் தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடிக் கண்டறிந்தவர் அவர்.

அடித்தள மக்களிடம் இருக்கும் பண்பாடுகளைக் காக்க வேண்டியதன் அவசியத்தைக் கூர்மையாக முன்வைத்தவர் தொ.ப. எளிமையான மொழியின் வழி நுண் அரசியலைப் புரியவைத்தவர். 'பண்பாட்டு அசைவுகள், அறியப்படாத தமிழகம், உரைகல், தெய்வம் என்பதோர் சமயங்களின் அரசியல் போன்ற இவரது நூல்கள்.' தமிழர்தம் பண்பாட்டைத் தாங்கி நிற்கும் அரிய ஆவணங்களாகும்.

**வினாக்கள்:–**

1. தொ.ப. என்று அழைக்கப்படுபவர் யார்?

2. தம்முடைய படைப்புகளில் காரண காரியங்களுடன் தொ.ப. குறிப்பிட்டுள்ளவை யாவை?
3. தொ.ப. யாருடைய பண்பாடுகளைக் காக்க வேண்டியதன் அவசியத்தை முன்வைக்கிறார்?
4. எளிய மக்களிடம் தொ. ப. எவற்றைத் தேடிக் கண்டிறிந்தார்?
5. தொ.ப எழுதிய நூல்களுள் மூன்றைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ
## மொழிபெயர்ப்புத் திறன்

**II. கீழ்க்காணும் தமிழ்ப் பத்தியினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் :–**
**Translate the following Tamil passage into English :– (1x5=5)**

ஒவ்வொரு பண்டைய நாகரிகத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. அதைச் சார்ந்த மக்கள் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியவற்றின் வழி அவர்களின் பண்பாடு வெளிப்படுகிறது.

**III. கீழ்க்காணும் ஆங்கிலப் பத்தியினைத் தமிழில் மொழிபெயர்க்கவும்:–**
**Translate the following English passage into Tamil :– (1x5=5)**

Human migration is the movement by people from one place to another with the intention of settling temporarily or permanently in the new location. The movement is typically over long distances and from one country to another. But internal migration is also possible. Migration may be as individuals, family units of large groups.

## பகுதி – இ
## இலக்கணப்பகுதி

**IV. சரியான தொழிற்பெயர்களைப் பொருத்தி எழுதுக.**
**Match the correct profession titles and write them. (1 X 5 =5)**

1. விடு – வினைமுற்று
2. வீடு – முதனிலைத் தொழிற்பெயர்
3. விடுதல் – வினையாலணையும் பெயர்
4. விடுவான் – முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
5. விட்டவன் – தொழிற்பெயர்

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**Answer any Five questions. (5 X 2=10)**

1. வகர மெய்யெழுத்து மொத்தம் எத்தனை உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து வரும்?
2. உரிச்சொல் – விளக்குக.
3. தளை என்றால் என்ன?
4. வழுவமைதி என்பது யாது?
5. புணர்ச்சி என்றால் என்ன?
6. பண்புத்தொகை என்றால் என்ன?

**பகுதி – ஈ**
**பாடப்பகுதி**

**VI. எல்லா வினாக்களுக்கு ஒரு சொல் / தொடரில் விடை தருக**
**Answer all questions in a word / sentence. (5X1 =5)**

1. தமிழ்ப் புலவருக்குப் பரிசளிக்கத் தன் தலையைக் கொடுக்கத் துணிந்தவர் யார்,
2. கோசல நாட்டு வயலின் வரப்புகளிலெல்லாம் எது நிறைந்திருந்தது?
3. பிரேசிலின் மிகப் பெரிய ஆறு எது?
4. இசைப்பள்ளிகள் அதிகமாக உள்ள நாடு எது?
5. தென்கொரிய நாட்டின் எந்தக் கடைகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன?
6. செவ்வாய்க் கோளில் மண் எந்த நிறத்தில் காணப்படுகிறது?

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக :–**
**Answer any five questions in three lines each :– (5 x 2= 10)**

1. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் பயனாக உருவாகியவை யாவை?
2. அலோபதி குறித்து எழுதுக.
3. பிரேசில் மக்களின் தனிச்சிறப்பு மிக்க கலைகள் யாவை?
4. அப்துல் கலாம் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
5. எவற்றையெல்லாம் தருவது ஈகை?
6. கணினியில் உள்ளதை அப்படியே நமக்கு வாசித்துக் காட்டும் மென்பொருள் எது?

**VIII. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக :–**
**Answer any one of the following questions in essay format :– (1x 10 = 10)**

1. உலகிலுள்ள மருத்துவ முறைகள் குறித்து எழுதுக.
2. அப்துல் கலாமின் இளமைக்காலம் குறித்தும் சாதனைக் காலம் குறித்தும் கட்டுரை ஒன்று எழுதுக.
3. கும்மிப்பாட்டு வடிவத்தில் எட்டு அடிகள் கொண்ட நாட்டுப்புறப் பாடல் ஒன்றினை இயற்றுக.

## பகுதி – உ
## செய்யுள் பகுதி

**IX எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
**Answer any Five questions. (5 x 2= 10)**

1. நீலகேசி நூலின் உரையாசிரியர் யார்?
2. தனிப்பாடல்கள் பாடியுள்ள நான்கு புலவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. ஈரோடு தமிழன்பன் எழுதிய எந்த நூலுக்குச் சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.
4. கலித்தொகையைப் பாடிய புலவர்கள் எத்தனை பேர்?
5. இரட்டைக்காப்பியங்கள் யாவை?
6. எவ்வாறெல்லாம் உண்ணக் கூடாது என ஆசாரக்கோவை கூறுகிறது?

## பகுதி – ஊ
## படைபாற்றல் பகுதி

**X ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக :–**
***Write an essay any one of the following questions :–*** **(1x 10= 10)**

1. உலகளாவிய அறம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

2. உலக வெப்பமாகுதல் பற்றிய செய்திகளைத் தொகுக்கவும்.

3. தமிழர்களின் வானியல் அறிவு பற்றிய கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

******